சிவமயம்

News
aperin Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷ
(1889)
ஆவணிமாதம்
28-க்கு ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹூ ஆடி மீ கூ ௨ (1947 ஜூலை 25 வெள்ளிக்கிழமை) [இல நூ௨

## பிரார்த்தனை

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன் நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந் திருப்பெருந் துறையுறை
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை யாருன்னை யறியகிற் பாரே. [சிவனே

—மணிவாசகர்.

## பட்சபாதகமா?

### மிஸ்ரர் தகநாயக்கா முறையீடு

பாராளுமன்றத்துத் தேர்தற்றினங்கள், ஐக்கியதேசியக்கட்சியின் சார்பாக அபேட்சகராக முன்வருவோர்க்கு வசதியாகநிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன என்று மிஸ்ரர் தகநாயக்கா முறையிடுகிறார். காலித் தொகுதிக்கு ஓர் அபேட்சகராக முன்வந்திருக்கிறார். அவர்க்கெதிராக ஐ. தே. கட்சியைச் சேர்ந்த மிஸ்ரர் எச். டபிள்யூ அமரசூரியா என்பவர் நிற்கிறார். காலித்தொகுதிக்கான தேர்தல் செப்டம்பர்மாதம் 6ம் திகதிக்கென இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

செப்டெம்பர்மாதம் 4-ந் திகதி யாழ்ப்பாணப்பட்டினத் தொகுதிக்கான தேர்தல் நிகழும் என நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இத் திகதி தமக்கும், பெரும்பான்மையினரான வாக்காளர்களுக்கும் வசதியீனமானதென்று ஸ்ரீ ஜீ. ஜீ. பொன்னம்பலம் தேர்தல் அதிகாரிக்கு ஓர் ஆட்சேபனைக் கடிதம் அனுப்பியுள்ளார். தேர்தல் திகதிகள் யாவும் நிர்ணயிக்கப்பட்டுவிட்டன. இனி அவற்றில் மாற்றம் செய்வதாக இருந்தால், மிகவும் கஷ்டங்கள் ஏற்படும் என்று அரசாங்கம் கருதுகிறது.

## போட்டி இல்லை!

### கொத்தலாவலை, பண்டாரநாயக்காவிற்கு

நாளைச் சனிக்கிழமை 26-7-47 இலங்கை முழுவதும் பாராளுமன்றத் தொகுதிகளுக்கான நியமனப் பத்திரங்கள் அபேட்சகர்களினால் சமர்ப்பிக்கப்படும். அநேகமாக எல்லாத் தொகுதிகளிலும் கடுமையான எதிரிடை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரசாரகரும் போக்குவரத்துப்பகுதி மந்திரியாகவும் உள்ள மிஸ்ரர் ஜே எல். கொத்தலாவலையும், ஐ. தே. க உப தலைவர்களில் ஒருவரான மிஸ்ரர் பண்டாரநாயக்காவும் போட்டியில்லாமலேயே தெரிவு செய்யப்படுவர் என்றும் ஓர் செய்தி கூறுகிறது.

பாராளுமன்றத்தின் முதல் தேர்தல் மிஸ்ரர் சேனநாயக்காவின் தொகுதியான மீரிகமத்திலேயே நிகழும் இத்தொகுதியிலே மிஸ்ரர் சேனநாயக்காவே வெற்றிபெறுவர் என்றும், ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு மிகப் பெரும்பான்மையான வாக்குகளால் வெற்றி யடையமாட்டார் என்றும் கொழும்புரைம்ஸ் பத்திரிகையின் அரசியல் நிருபர் தெரிவிக்கிறார்.

## நேருவே முதற்பிரதமர்

### காங்கிரஸ் அதிகாரபீட முடிவு



[பண்டிதர் ஜவஹர்லால்நேரு]

இந்தியாவின் அரசியல் நிர்மாண சபையே, இனி இந்திய சமஷ்டியரசியலின் பாராளுமன்றமாகவுமிருக்கும். அச் சபையிலே, காங்கிரஸ கட்சித் தலைவராகப் பண்டிதர் ஜவஹர்லால் நேருவையே தெரிவுசெய்யவேண்டும் என்று காங்கிரஸ் காரிய நிருவாகசபை தீர்மானித்துவிட்டது. காங்கிரஸ்கட்சித் தலைவராகவருபவரே, பிரதமராகவும் வரவேண்டுமாதலால், பண்டிதர் ஜவஹர்லால் நேருவே சுதந்திர இந்தியாவின்முதற்பிரதமராகவிருப்பார்,

ஆகஸ்டு மாதம் 15ம் திகதியுடன் இந்தியா பூரண சுதந்திரம் பெறப்போகிறது அத்தினத்தைக் கொண்டாட இந்தியாவெங்கும் ஏற்பாடுகள் ஜரூராக நிகழ்ந்து வருகின்றன பல அரசியற் சிறையாளர்கள் சிறைக்கூடங்களிலிருந்து விடுதலை செய்யப்படுவர்.

அரசியல் நிர்மாணசபைத் தலைவராகவுள்ள பாபு இராஜேந்திரப் பிரசாத், பீகார் மாகாணத்துத் தேசாதிபதியாகவும் நியமிக்கப்படலாம் என்றோர் செய்தி கூறுகிறது.

## கர்மயோகி சுந்தரர்

[இன்று வெள்ளிக்கிழமை 25-7-47 சுந்தரர் திருநாள் தமிழ் நாடெங்கும் கொண்டாடப்படுகிறது]

(முற்றொடர்)

ஒரு சமயத்தில் தில்லைப்பதியில், சுந்தரர் இசைப் பாடடுப்பாட அதற்கேற்ப இறைவன் ஆடியருளியதாக ஒரு கதை உண்டு. இன்னும் குடியலூர் என்னும் ஸ்தலத்திலே, சுந்தரருக்கு முருங்கைக்காய், முருங்கை இலை, இவைகளைச் சமைத்து விருந்து அளித்ததாக ஒரு வரலாறும் காணப்படுகிறது. இப்படி இறைவனைப் பணி கொண்டதன்றி, அவனை வசியும் பரிகசித்தும், காரியங்களைச் சுந்தரர் சாதித்துக்கொண்டதுண்டு. ஒரு பாசுரத்தில் அவர் இறைவனை நோக்கி, "உனது இருப்பிடம் சுடுகாடு; கையில் ஏந்தியது பிச்சைப் பாத்திரம்; உன்னிடம் அன்பு பூண்பவர்க்குக் கொடுக்க என்ன இருக்கப்போகிறது?" என்று நிந்தாஸ்துதி செய்கிறார். இது பக்திப் பெருக்கையே குறிக்கும். இறைவனும் தோழமை முறையில் இதைப் பெரிதும் உவந்திருந்தான். திருப்பாச்சிலாச் கிராமத்தில் இருக்கும்போது சுந்தரர் இறைவனிடம் பொன் வேண்டினார்; அவருடன் தோழமை விளையாட விரும்பி இறைவன் அவருக்கு உடனே பொன் அருளவில்லை அதனால் சுந்தரர், சினங்கொண்டவர் போல, "இவரலாது இல்லைபோபிரானார்?" என்று வசியபிறகு பொன்னைப் பெற்றார். இப்படி இறைவனை வசுவது சில பக்தர்களிடம் காணப்பெறும் விசேஷமாகும், ஜனாபாய் என்ற மகாராஷ்டிர தேசத்துப் பக்தை, தன் இஷ்ட தெய்வமாகிய பண்டரிநாதனைப் பலபடியாக வசியிருக்கிறாள். துகாராம் என்ற இன்னொரு பக்தரும் இப்படிச் செய்ததுண்டு வைஷ்ணவ பக்தையான ஆண்டாள், "பெண்ணீர்மை யிடழிக்கும் இது தமக்கு ஓர் பெருமையே?" என்று இறைவனை வசியதையும், குலசேகராழ்வார், 'இன்னம் அங்கே நடநம்பி" என்று அவனைச் சுளித்துக் கொண்டதையும் இங்கு ஒப்பிடலாம்.

கண்களை இழந்த சுந்தரர், திருவாரூருக்குப் போகும் வழியில் திருவெணபாக்கத்தை அடைந்து அங்குள்ள ஆலயத்துக்குச்சென்று 'நம்பி! என் கண்மணியை மறைப்பித்த நீர், இங்கு இருக்கிறீரோ!' என்று கேட்டார். அவரோடு விளையாடவெண்ணிய இறைவன் ஓர் ஊன்றுகோலை அவருக்கு அருளி, "உளோம் போகீ" என்று மறு மாற்றந் தந்தான். உடனே சுந்தரர், தம்மை இறைவன் உபேக்ஷை செய்தான எனக்கொண்டு, 'ஒன்னலரைக் கண்டாற்போல் உளோம் போகீர் என்றீரே" என்று முறையிட்டாற்றி, 'உன் அருள் இவ்வளவுதானு?" என்று முனிந்து சென்றதும் தோழமையாலேயே திருவொற்றியூரிலே, சுந்தரர் சங்கிலியாரை மணக்க வேண்டிய போது, இறைவன் செய்தருளிய திருவிளையாடலிலும் இந்தத் தோழமைச் சேஷ்டையைக் காண்கிறோம். "சங்கிலியை மணக்க விரும்பினால், அவளை ஒருபோதும் பிரிவதில்லை என்று நீ சபதம் செய்ய வேண்டும்" என்று அருளிய இறைவனுக்குச் சுந்தரர், "அப்படியே செய்கிறேன். சபதம் செய்ய நான்உமதுசந்நிதானத்துக்கு வரும்போது, நீர் அங்கிராமல் மகிழமரத்தின்கீழ் எழுந்தருளி யிருக்க வேண்டும்" என்று விரும்பிக் கேட்டார். எங்கும் நிறைந்துள்ள தன்னை, குறிப்பிட்ட ஓர் இடத்திலே அமர்த்தப்பார்க்கும் சுந்தரருடைய முயற்சிக்கு இறைவன் புன்னகை புரிந்தானாகவேண்டும். அவ் வேண்டுகோளுக்கு இறைவன் இணங்கினான். ஆனால் அவன் உடனே சங்கிலியின் கனவில் தோன்றி "ஆரூரன் சபதம் செய்ய வருவான்; சந்நிதானத்தில் செய்யாமல் மகிழடிக்கீழ் அதைச்செய்யும்படி வற்புறுத்து". என்று திருவாய்மலர்ந்தனன். இந்தச் செய்கை அந்தரங்கத் தோழர்கள் இருவர் ஒருவர்க்கொருவரிடம செய்துகொள்ளும் விளையாட்டு வேடிக்கையை ஒத்திருக்கிறது. ஒரு சமயம் சுந்தரர் கோடியக்கரை என்னும் தலத்தைத் தரிசிக்கச் சென்றனர். அவ்வூர் நிர்ஜனப்பிரதேசமாக இருந்ததைக் கண்டு இறைவனை நோக்கி, "அடிகாள்! இங்கு இரவே துணையாக இருக்கிறீரோ? உமக்கார் துணை" என்று பரிவுடன் பாடியதும் தோழமையைத் தெரிவிக்கக்கூடியதே.

ஒரு சமயம் சேரபெருமான் கொடுத்த செல்வங்களுடன் சுந்தரர் திருவாரூருக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தனர். வழியில் திருமுருகன் பூண்டி என்னுமிடத்தில் சில வேடர்கள் வந்து, சுந்தரருடைய பொருள்களையெல்லாம் கைப்பற்றிச் சென்றனர். அப்போது அவர் அங்குள்ள ஆலயத்துக்குட் சென்று "ஆண்டவனே! நீர் இங்கு எதற்காக எழுந்தருளியுள்ளீர்?" என்று முறையிட்டார். இதுவும் தீவிர பக்தியால் உண்டான தோழமையின் காரியமே,

கடைசியாக, சுந்தரர் இறைவனுடைய பெருங் கருணையை வியந்து பாடிய திருவஞ்சைக்களப்பதிகத்தில் அவனுடைய இயல்புகளை விரித்துரைத்து, "நலனே, இனி நான் உனை நன்கு உணர்ந்தேன்" என்கிறார். அர்ச்சுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடன் தோழமை கொண்டாடினான். அவருடைய விஸ்வரூபத்தைத் தரிசித்ததும் அவன் அவருடன் தான் கொண்டாடிய பரிசயத்துக்குக் கழிபேரிரக்கமுற்று, மறதியினாலோ கோழமையாலோ தகாத வார்த்தைகளைப் பேசியிருந்தாலும், அபசாரப்பட் டிருந்தாலும், அவற்றை மன்னிக்கவேண்டும் என்று பிரார்த்தித்தான். இறைவனை நன்குணர்ந்தபிறகு சுந்தரருக்கும்இப்படிப்பட்ட மனோ நிலைமை ஏற்பட்டது. இந்த நிலையுடன்தான் அவர் மறுபடியும் சிவபெருமான் திருமுன்பு திருத்தொண்டு செய்யச் சென்றனர்.

"தில்லைவாழ் அந்தணர்தம்
அடியார்க்கும் அடியேன்"
இறைவனுடைய மெய்யடியார்களி

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து ஆடி மீ ௯ ௨ வெள்ளிக்கிழமை

## கதிரையாண்டவனே போற்றி

கலியுகந் தன்னிலே கண்கண்ட தெய்வமாகிய கதிர்காம வேலருக்கு ஆடி மாச மகோற்சவம் நிகழும், கிடைத்தற்கரிய காலம் இதுவல்லவா! எங்கள் கதிர்காமத்தையனை மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் வழிபடுதற்கு வாய்த்த இந்தச் சமயத்தைத் தவறவிட்டு நாம் சும்மாவிருக்கமுடியுமா? எங்களுக்கு நேர்ந்த இன்னல்களை நீக்கிக் கடைத்தேறச்செய்யும் வண்ணம் கதிரை யாண்டவனைப் போற்றுவோம்.

கதிர்வேற் பெருமானே! கதிர்காமத்தையனே! உனக்கு மகோற்சவமெனப்படும் பெருந் திருவிழா இந்த மாசத்திலே தொடங்கி நடைபெற, உன் தலத்தை யடைந்து உனது திவ்விய தீர்த்தமாகிய மாணிக்க கங்கையிற் படிந்து, அநுதினமும் உன்னைத் தரிசிக்க இந்த இலங்கையில்மாத்திர மிருந்தல்ல, இந்தியாவிலிருந்தும் பத்தகோடிகள் தாய்ப்பசுவை நாடிச் செல்லும் புனிற்றிளங்கன்றுபோல்உன்னிடம் ஓடிவருகிறார்களே; உன்னருளின்றி உன்னை வணங்க முயன்றாலும் அவர்களை உன் தலத்திற்கு இழுக்கிறாயில்லையே, உனக்கன்பரெனக் கண்டால், அவர்களுக்கு உன்னிடம் வரப் பொருளில்லாவிட்டாலும், வேறு சௌகரியங்க ளில்லாவிட்டாலும் அப்படியான அன்பர்களைப் பத்திவலையிற் படுத்தி இழுக்கின்றாயாமே! இது என்ன திருவிளையாட்டு ஐயா! ஆறுமுகங் கொண்ட தெய்வமே! உன்னை நேரில் வந்து ஆண்டுதோறும் தரிசிக்கும் பேறற்ற மக்களும் உன்னைத் தியானித்தால், பல நூறு மைல்களுக்கப்பால் நின்று உன்னைத் தம் மனத்தில் நினைத்து உன் திருக்கோயி லிருக்கும் திக்கை நோக்கிக் கும்பிட்டாலும், உனக்குரிய திருப்புகழைப் படித்தாலும் அவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்வாயாமே! அது உண்மைதானா? நீ திருவுளத்தில் நினைத்தால் என்னதான் செய்யமுடியாது?

அமரர்சிறைமீள அசுரர்உயிர் மாளச் சமரவடிவேல் விடுத்த சண்முகா! உன்னைத் தந் தெய்வம் எந்தெய்வமென்று சொல்லி எல்லாச் சாதியினரும் எல்லாச் சமயத்தினரும் ஏத்துகிறார்களே! இந்த நேரத்தில் உன் சந்நிதியிற் சைவர்களைக் காணலாம், வைஷ்ணவர்களைக் காணலாம், பௌத்த இஸ்லாமிய கிறிஸ்தவர்களையுங் காணலாம்; ஏனைய தலங்களில் இப்படிக் காண்டலரிது; இதுவும் உன் திருவருட் பெருமையன்றோ! இந்த இலங்கை நாட்டிலே பௌத்தரென்றிருப்போர் உன்னைத் தந்தெய்வமென்று சொல்லி உன் கோயிற்பரிபாலனத்தையுந் தாங்களே வைத்து நடத்திவர, இந்துக்களென்றிருப்போர் உன்னை எந் தெய்வமென்று வழிபட்டு உன் கோயிற் பரிபாலனத்தையும் தாம் பெறவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்; ஐயா! துய்யா! முருகையா! பன்னிரு கையா! உனது திருக்கோயில் இந்த இருபாலாருள் யாரிடத்திருப்பது உனக்குப் பிரியமென்பதை, நீ சொப்பனத்திலாவது வந்து சொல்லவொண்ணாதா?

"நாரணன் முதலினோர் நாடிக் காணொணா
ஆரண முதல்வனும், உமையும் அன்னவர்
சீரரு ளடைந்தனர் சிலரு மல்லதை
யார்உன தாடலை யறியு நீரினார்"

என்றவாறு கந்தக் கடவுளே! உனது திருவிளையாட்டை அந்த இறைவியும் இறைவனும் அவனருள் பெற்ற மெய்யடியார் சிலரு மறிதல் முடியுமேயொழிய, சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய எம்போல்வாரால் உன் அருள் விளையாட்டின் இரகசியத்தைச் சிந்திக்க முடியுமோ!

ஏழுமலையின்எழுந்தருளும் எந்தையே! உன்னைப் பலவருட காலம் வாகனமாகச் சுமக்கும் பாக்கியம் பெற்ற புண்ணிய யானை சிலமாசங்கட்கு முன்னர் உன் திருவடியை அடைந்துவிட்டதாமே! இப்பொழுதும் உன்னைத் திருவிழாவில் ஒரு யானை சுமக்கும் பேற்றைப் பெற்றிருக்கிறதாமே! இந்த யானை முற்பிறப்பில் என்ன புண்ணியஞ் செய்ததோ, நீ அறிவாய், நான் அறியேன்; ஆறறிவுடைய மானுடராய்ப் பிறந்தும் உன்னை வணங்கி உன்னைப் பூசியாத உலுத்தரைக் காட்டிலும், உந்த யானையின் பிறப்பு உத்தமமானதல்லவா! உன்னை மயிலாகிச் சுமப்பதற்குச் சூரன் பல்லாயிர வருடம் ஆலவனத்திலே தவஞ் செய்து அப்பேற்றைப் பெற்றானாமே! கதிர்காமத்தையா! உன் கருணைத் திறத்தை நினைக்க நினைக்க வெயிலிடைப்பட்ட வெண்ணெய் போல் உள்ளம் உருகுகிறது, கண்ணீர் பெருகுகிறது, உரோமஞ் சிலிர்க்கிறது, கதிரையாண்டவனே! இந்த நேரத்தில் உன் திருவிழாவைத் தரிசிக்கும்படி உன்னுடைய தலத்திற்கு வந்திருக்கும பல கோடிக்கணக்கான பக்தர்களுக்கு உன் அருள்வெள்ளத்தைப் பாலிப்பதோடு, உன்னை வந்து வணங்க வகையில்லார்க்கும் உன் கருணைக் கடலில் ஒரு துளியைத் தெளித்துவிட்டால் ஈடேறிவிடலாம் ஐயனே!

---

### யாழ்ப்பாணம் நீர்ப்பாய்ச்சல் திட்டம்

10 லட்ச ரூபாய் செலவில் வடமாகாணத்தில் ஏற்படுத்தப்படவிருக்கும் நீர்ப்பாசனத் திட்டத்தை உடனே அரசினர் ஆரம்பிப்பர்.

இந்தத் திட்டத்தின் பிரகாரம் தொண்டைமானாறில் திடல் ஒன்று நிர்ணயிக்கப்படும். அதன் மூலம் வடமராட்சி ஏரியிலுள்ள உப்புநீர் நல்ல தண்ணீராக மாற்றப்படும். இத்திட்டம் பூர்த்தியானதும் 1500 ஏக்கர் நிலத்தில் பயறுவகைகள் கொச்சிக்காய் வெங்காயம் புகையிலை முதலியவை விளைவிக்க வசதி ஏற்படும். உள்நாட்டு மந்திரி திரு. மகாதேவா இத்திட்டத்தை அடுத்த ஞாயிறன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

# குறிப்புக்கள்

### ஸ்ரீஜாத் கிரியின் புத்திமதி

இந்தியா இலங்கை என்னும் இரு நாடுகளும் வெகு சீக்கிரத்தில் சுதந்திரமடையவிருக்கின்றன. இதுவரை மூன்றாம் பேர்வழியான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதி திரைமறைவில் இருந்து இருநாடுகளுக்குமிடையே பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டுவந்தமையினால், குறித்த இரு நாடுகளுக்குமிடையே யுள்ள பிரச்சினைகள் சம்பந்தமாக ஓர் சமரசமும் ஏற்படமுடியவில்லை. ஆனால், அந்த மூன்றாம பேர்வழி தனது மூட்டை முடிச்சுக்களுடன் இருநாடுகளையும் விட்டுப் புறப்பட்டவுடன், சமரசம் தானாகவே வந்துவிடும். அதற்கிடையில் இலங்கைவாழ் இந்தியர் பொறுமையுடனும், இலங்கைவாழ் பெரும்பான்மைச் சமூகத்துடன் சகோதரத்துவபான்மையுடனும் நடக்க வேண்டும் என்று சென்றவாரம், இந்திய அரசாங்கத்துப் பிரதிநிதியான ஸ்ரீஜாத் கிரி கூறிய நன்மொழிகளை, இலங்கைவாழ் இந்திய சமூகத்துக்கு அப்படியே அர்ப்பணம்செய்ய விரும்புகிறோம். ஸ்ரீஜாத் கிரி ஓர் சிறந்த அரசியல்வாதி, பொறுப்புள்ள ஓர் மேதாவி; காந்தி மகாத்மாவின் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர். அவர்போன்றார், இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக இருக்கும்போது, இந்திய மக்கள் எதற்கும் அஞ்சவேண்டியதேயில்லை. அவர்கள் தமக்கு நீதிவழங்கும்என்று திடநம்பிக்கையுடன் இருக்கலாகும். ஆனால் அவர்களது நம்பிக்கையைச் சிதறடிக்கவும், இந்தியர்-இலங்கையர் என்ற பேதத்தைப் புகுத்தி, நாட்டு மக்களுக்கிடையே மனக்கசப்பையுண்டாக்கவும் கங்கணம்கட்டியுள்ள ஓர்சில இந்தியத் 'தலைவர்'களும் இன்று இலங்கையில் இருப்பது இந்தியமக்களின் பொல்லாதகாலம் என்றே கருதுகிறோம். இத்தகைய "தலைவர்"களில் ஒருவர்தான் ஜனாப் அஸீஸ் என்பவர். இவர் சென்றவாரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்து சக்கிய வகுப்புவாதப் பிரசாரத்தை நாம் பலமாகக் கண்டிக்கிறோம். ஜின்னாவின், பாகிஸ்தான் கொள்கையில் ஓர் காலும், இலங்கை இந்தியக் காங்கிரசில் ஓர்காலும் வைத்துள்ள இந்த அஸீஸ்போல்வார்தான், இந்திய மக்களது அந்தரங்க விரோதிகளாவர். அடுத்துக்கெடுக்கும் இத்தலைவர்களை இந்திய மக்கள், நம்பியிராமல், பொறுப்புவாய்ந்த ஸ்ரீஜாத் கிரி போன்றார் வகுக்கும் வழியைப் பின்பற்றுவாராக.

* * *

### பர்மாப் படுகொலை

பர்மாவில் நிகழ்ந்த பயங்கரப் படுகொலைகளை நாம் பலமாகக் கண்டிக்கிறோமெனினும், அதனைப்பற்றி நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதுவரை பீடித்திருந்த அந்நியாட்சி அகலும் காலையிலே, இத்தகைய பயங்கர சம்பவங்கள் நிகழ்வது நூதனமல்ல. ஆனால், அவற்றைக் காரணமாக வைத்துக்கொண்டு, பர்மாவின் சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டையிடச் சில பிரிட்டிஷ் அரசியல் வாதிகளும் பத்திரிகைகளும் முன்வந்திருப்பதுதான் நூதனமாகவிருக்கிறது. இத்தகைய வேலைகளினால் பர்மா சுதந்திரத்துக்குத் தகுதியுடையதோ என்பது ஆசங்கைக்கிடமான விஷயம் என்று "கிளாஸ்கோ ஹெரால்ட்" என்னும் வெள்ளைப் பத்திரிகை கும்மாளம் போடுகிறது. ஆனால் தங்கள் சொந்த அரசனைக் கொலைசெய்து, இன்னோர் அரசனைத் தேசப்பிரஷ்டம் செய்து, பயங்கரமான பல புரட்சிகளைச் செய்த பிரிட்டிஷார் ஆதித்தன் மறையாச் சக்ராதிபத்தியத்தை ஆட்சி செய்ததை இந்த வெள்ளைப் பத்திரிகைகள் இதற்கிடையில் மறந்து மற்றும் நாடுகள் விஷயத்தில் குற்றம் கண்டுபிடிக்க முன்வந்தமை காலத்தின் கோலமா? அல்லது இதுவும்பிரிட்டிஷ் இராஜதந்திரமா?

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—24)

### "கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்?"

பாக்கியலட்சுமியும் கண்ணம்மையும் சிவபாக்கியமிருக்குமிடத்திற்குப் போய்விட, இராமன்மாத்திரம் தட்டிலே நிற்க, அந்த ஆள் இராமனைக் கூப்பிட, இராமன் போனான்; 'இராமன், நீ இன்னமும் இராப்போசனஞ் செய்யவில்லையே, இல்லாவிட்டால் என்னுடன் போசனஞ் செய்யலாம்" எனலும், "இல்லை ஐயா, போசனத்திற்கு இன்னமும் நேரமிருக்கிறது; நான் படுக்கைக்குப் போகும்போதுதான் உண்பது வழக்கம்; சற்றுச் செல்லப் போய், அங்கே உணவு கொள்வேன்; வேணுமானால், நாளைக்கு ஆச்சியிடஞ் சொல்லிவிட்டு உங்களிடம் உண்ணுவேன்; குறையெண்ணாதீர்கள்" என்று இதமாகச் சொன்னான் இராமன். "இராமன், கேட்கிறேனென்பதையிட்டு விபரீதமாக எண்ணிவிடாதே; உங்கள் ஆச்சியின் அருகில் நின்ற அந்தச் சின்னம்மாளுக்கு விவாகமாய்விட்டதா" என்று அந்த ஆள் கேட்க, "இன்னமும் ஆகவில்லை" என்றான் இராமன்: "விவாகமாகுமுன் தூர தேசத்திற்குப் புறப்பட்டுப் போகும் வழக்கம் எங்களூரிலே அதிகமாக இல்லையே, அப்படியிருப்ப இவர்கள் இப்பொழுது எதற்காகப் புறப்பட்டுப் போகிறார்கள்? இவர்களுடைய சொந்தக்காரர் யாராவது அங்கிருக்கிறார்களோ? இல்லையேல் இந்தப்பெண்ணை அங்கே கல்யாணஞ் செய்து கொடுக்கக் கூட்டிக்கொண்டுபோகிறார்களோ" என்று அந்த ஆள் கேட்க, "இவைகளைப்பற்றிய விபரம் எனக்கு அதிகந் தெரியாது ஐயா, பயணம் புறப்படச் சில வாரங்களுக்கு முந்தித்தான் நான் இவர்களுடைய வீட்டில் வந்துசேர்ந்தேன்; ஆனாலும் இவர்கள் எங்களுக்கு முந்தியே அறிமுகமானவர்கள்; இவர்கள் வீட்டிற்கு அயலிலேதான் நாங்களிருப்பது; இந்த ஆச்சியினுடைய மகனொருவர் அங்கே உத்தியோகமா யிருக்கிறாரென்றும், அவரைப் பார்க்கத்தான் இவர்கள் போகிறார்களென்றுமே அறிந்திருக்கிறேன்; வேறு விபரங்கள் அறியேன்: வேணுமானால் ஆச்சியைக் கேட்டுச் சொல்லட்டுமா?" என்று இராமன் கேட்க, "இல்லை, நான் வினவியதாய் நீயொன்றுங் கேட்க வேண்டாம்; நீயாகக் கேட்பதுபோற் கேட்டறிய முடியுமானாற் கேள்" என்று அந்த மனுஷன் சொல்ல, இராமன், "ஐயா, நானாகக்கேட்பது முறையல்ல; கேட்டாலும் அந்த ஆச்சி, 'கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்' என்று என்னைக் கண்டிப்பார்கள்" என்று பதில் சொல்லிவிட்டு, "அது சரி ஐயா, நீங்கள் எதற்காக அவர்களுடைய வரலாற்றையறிய விரும்புகிறீர்கள்? அதை நானறியச் சொல்லலாமோ" என்று கேட்க, அந்த ஆள், "வேறொன்றுமல்ல, ராமன் என்னை அவர்கள்

தொடர்ச்சி 5ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசியல்

# இரு அரசாங்க அங்குரார்ப்பணம்

## இந்திய இடைக்கால ஒழுங்கு

ஆகஸ்டுமாதம் 15ந்திகதி-பாகிஸ்தான், இந்தியா என்னும் இரு தேசங்களுக்கும் அதிகாரத்தை மாற்றுவதற்கு முன்னேற்பாடாக, இப்போதுள்ள இடைக்கால அரசாங்கத்திலேயே, பாகிஸ்தான் - இந்திய விவகாரங்களைப் பரிபாலிக்க இராஜப்பிரதிநிதி மவுன்ற்பேற்றன்பிரபு இரண்டு மந்திரசபைகளை நியமித்திருக்கிறார். பாகிஸ்தான் சம்பந்தப்பட்டமட்டில், லீக் மந்திரிகளும் இந்தியா சம்பந்தப்பட்டமட்டில், காங்கிரஸ்கட்சியங்கத்தவர்களும் கடமையாற்றுவர். பின்வருமாறு மந்திரசபை வகுக்கப்பட்டிருக்கிறது:

### இந்தியாவுக்கு

பண்டிதர் நேரு: வெளிநாட்டு வியவகாரம்,

சர்தார்படேல்: உள்நாட்டு வியவகாரம், செய்திப்பகுதி, விளம்பரம், சமஸ்தானங்கள்.

பாபு ராஜேந்திர பிரஸாத்: உணவு, விவசாயம்.

மௌலானா அபுல்கலாம் ஆஸாத்: கல்விப்பகுதி.

டக்ரர் ஜோன் மத்தாய்: போக்குவரத்துப்பகுதி, புகைரதப்பகுதி, தபால், தந்திப்பகுதி

சர்தார் பல்தேவ்சிங்: ராணுவம்

ஸ்ரீ C. H பாபா: கைத்தொழில்கள், சுரங்கம், வர்த்தகம்.

ஸ்ரீ ஜகஜீவன்ராம்: சுகாதாரம்.

ஸ்ரீஜாந் ஜகஜீவன்ராம் இப்போது விமானவிபத்தில் அகப்பட்டு, பார்சீகத்திற் சிகிச்சை பெறுகிறார். அவர் வரும்வரையில், அவர் ஆற்றவேண்டிய கடமைகளைப் பண்டிதர்நேருவே வகிப்பர்.

### பாகிஸ்தான்

லியாகத் அலிகான்: வெளிநாட்டு விவகாரம், ராணுவம், நிதி.

ஜனாப் ஐ. ஐ. சுந்திரிகர்: வர்த்தகம், கைத்தொழில், சுரங்கங்கள்.

ஜனாப் அப்துல்ரூப் நிஷ்டர்: போக்குவரத்து, புகைரதப்பகுதி, தபால் தந்திப்பகுதி, விளம்பரம், சமஸ்தானங்கள்.

ஜனாப் கஸ்னபர் அலிகான்: உள்நாட்டு வியவகாரம், விபவகாரம், சுகாதாரம், உணவு, விவசாயம்,

மிஸ்ரர் ஜே. என். மண்டல்: கல்வி, சட்டம், தொழிலாளர்பகுதி.

இந்த ஒழுங்கு ஆகஸ்டுமாதம் 15ந்திகதி வரைக்கும்தான். அதன்பின், பாகிஸ்தான் மந்திரசபை பாகிஸ்தானிலும், இந்தியாவின் மந்திரசபை, புதுடெல்கியிலும் இருக்கும். ஆகஸ்டிற்குப்பின், பாகிஸ்தான் சமஷ்டியில் 9 மந்திரிகள் இருப்பர் என்றும், அவர்களில் எழுவர் முஸ்லீம்களாகவும் இருவர் ஹிந்துக்களாகவும் இருப்பர் என்றும் ஓர் செய்தி கூறுகிறது.

# சுயம்வரம்

## இந்தியக் கிராமத்திலே நிகழ்ந்தது

பூர்வகாலத்திலே சுயம்வரமுறையில் ஓர் பெண்ணை விவாகம் செய்துகொடுப்பது வழக்கமாயிருந்தது. அந்த வழக்கத்தை இந்தியாவின் ஐக்கியமாகாணத்தின் ஜான்ஸிப்பகுதியிலே இப்போது ஓர் காங்கிரஸ்வாதி கைக்கொண்டதாக லக்னோ மணபுரி "டெயிலி ஹெரல்ட்" பத்திரிகை கூறுகிறது.

குறித்த காங்கிரஸ்வாதியின் பெயர் பால்சந்த்குப்தா. இவருக்கு ஒரே ஒரு மகள் உண்டு. இப்பெண்ணை மணம் செய்ய விரும்பும் வாலிபர் குறித்த திகதி ஒன்றில் மணப்பந்தரிலே கூடவேண்டுமென்று ஸ்ரீஜத் பால்சந்த் அறிவித்தார். அதன் பிரகாரம் அக்கிராமவாலிபர் பலர் நியமிக்கப்பட்ட திகதியன்று, மணப்பந்தரில் வந்து குழுவினர்.

மணப்பெண்ணுக்கு ஆடையாபரணதிகள் அணிந்து பந்தலிற் கொண்டுவந்துவிட்டார்கள். பெண்ணும், அப்பந்தரிலே வரிசையாக இருந்த வாலிபர்களை எல்லாம் பார்த்துவிட்டு, ஈற்றில் தனக்குப் பிடித்த ஓர்வாலிபனுக்கு மாலையிட்டாள்.

இதனை அவள் பெற்றோர் ஒப்புக்கொண்டு, குறித்த கன்னிகைக்கும், அவள் தெரிந்தெடுத்த வாலிபனுக்கும் வேதவிதிப்படி அந்தப் பந்தரில்தானே விவாகத்தை நிறைவேற்றினர்.

# அதுவுமநடக்குமா.

## எட்மண்ட் சமரக்கொடியின் அச்சம்

மீரிகமத் தேர்தலில் மிஸ்ரர் சேனநாயக்காவும், சமசமாஜிகள் சார்பாக மிஸ்ரர் எட்மண்ட் சமரக்கொடியும் போட்டியிடுகிறார்கள். தேர்தல் முடிந்ததும் வாக்குச் சீட்டுக்கள் எண்ணப்படவேண்டும் அப்படிச் செய்யாமல், இரண்டு நாட்களுக்கு இருந்தால் அதனை மிஸ்ரர் சேனநாயக்காவின் அந்தரங்க நண்பர்களான அரசாங்க உத்தியோகத்தர்கள் வாக்குச் சீட்டுப் பெட்டியை உடைத்து அவரேவெற்றியடையத்தக்கதாகச் செய்துவிடவும்கூடும் என்று மிஸ்ரர் சமரக்கொடி சென்ற செவ்வாய்க்கிழமை நிகழ்ந்த ஓர் கூட்டத்திற் கூறினர் இந்தக் கூட்டம் மிஸ்ரர் சமரக்கொடி வைத்துள்ள 53வது கூட்டமாகும்.

இக்கூட்டத்திற் பேசிய ஸ்ரீ ராகுலதேரோ என்னும்பௌத்ததரு,பௌத்தகுருமார் சங்கத்தைச்சேர்ந்த 15,000 பௌத்த பிக்குகளும் மிஸ்ரர் சேனநாயக்காவை மீரிகமத்திலிருந்து தாத்தக் கங்கணம் கட்டிவிட்டனர் என்று கூறினர்.

# செய்தித் திரட்டு

இந்தியாவிலே கோவதை செய்யப்படுவதைத் தடுப்பதற்கு, பிரபல கோடீஸ்வரரான சேற். ராமக்கிருஷ்ணதால்மியாஎன்பவர் ஓர் இயக்கத்தைக் கூடிய சீக்கிரம் ஆரம்பிக்கப்போகிறார்.

0 0 0

இந்தனேஷியாவுக்கும், ஒல்லாந்தர்க்குமிடையே நிகழ்ந்துள்ள பிணக்கைத்தீர்க்க பண்டிதர் ஜவஹர்லால் நேருவின் உதவியை இருபகுதியாரும் நாடலாம் என்று ஓர் செய்தி கூறுகிறது.

0 0 0

பாகிஸ்தானில் பிரிட்டிஷ் இராஜரீகத் தூதுவராக சேர். லாரென்ஸ் கிராப்ரிஸ்மித் என்பவர் நியமித்திருக்கிறார்.

0 0 0

குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிப்பதை ஒழிக்க சென்னையரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

# குருமாரும் அரசியலும்

## சேனநாயக்கா ஆதரவு தேடுகிறார்

பௌத்தபிக்குகள் அரசியலிற் பங்கு பற்றக்கூடாது என்று பிரசாரம் செய்து வந்த மிஸ்ரர் சேனநாயக்கா இன்று மீரிகமத் தேர்தலில் அதே பௌத்தபிக்குகளின் ஆதரவை நாடுகிறார் என்று "கொழும்பு லிற்றி நியூஸ்" பத்திரிகையின் நிருபர் தெரிவிக்கிறார்.

சென்றவாரம் மீரிகமத்தில் உள்ள ஸரஸ்வதி பிரிவீன என்னும் பௌத்த ஆலயத்துக்குள் மிஸ்ரர் சேனநாயக்கா புகுந்து, தம்மை ஆதரிக்கும்படி அங்கிருந்த பிரதம குருவரை வேண்டினாராம். இதனைக் கேட்டதும் அக் குரு தயக்கம் கொண்டாராம். ஏன்? இதே மிஸ்ரர் சேனநாயக்காவும் அவரை ஆதரிக்கும் 'தினமின' 'சிலுமின' என்னும் சிங்களப் பத்திரிகைகளும் பௌத்த குருமார் அரசியலிற் பிரவேசிக்கக்கூடாது என்று பிரசாரம் செய்துவந்தமையால் என்க. இப்படிய அம் மதகுரு எங்கி நிற்கையில் மிஸ்ரர் சேனநாயக்கா அவரை நோக்கி, "சுவாமி! சிலுமின, தினமின பத்திரிகைகள் செய்யும் பொய்ப்பிரசாரங்களை நம்பவேண்டாம். பௌத்த குருமார் அரசியலிற் பங்குபற்றுவதை நான் ஓர்போதும் ஆட்சேபிக்கவேயில்லை. ஆகவே தாங்களும் ஏனைய பௌத்த குருமாரும் எனக்குக் கட்டாயம் இந்தத் தேர்தலில் ஆதரவளிக்கவேண்டும்" என்று வேண்டினராம்,

பிக்குவும் தம்மால் ஆனதைச் செய்வதாக வாக்களித்தாராம்,

# பர்மாக்கொலை

## பிரிட்டிஷ் பத்திரிகைகளின் கும்மாளம்

சேனாதிபதி ஆங்ஸேனும் அவரது சகாக்களும் கொலையுண்டிருப்பது பற்றி உலக ராஜதந்திரிகள் அனைவரும் அனுதாபம் தெரிவித்துள்ளனர். இந்தியாவில், பண்டிதர் நேரு, ஜனாப் ஜின்னா பிக்கானீர் மகாராஜா முதலாம் பிரமுகர் இச்சம்பவத்துக்கு வருத்தம் தெரிவித்துள்ளனர்.

ஆங்ஸேனின் இடத்துக்கு அவரது கையாளாகவிருந்த தாக்கின்நூ என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இறந்த மந்திரிகளின் இடத்துக்குப் புதியவர்கள் நியமிக்கப்பட்டுவிட்டனர்

இந்தச் சதியாலோசனையைச் செய்தவர் எனப்படும் யூஸாவும் இன்னும் பலரும் சிறையாக்கப்பட்டிருக்கின்றனர்.

பர்மாக்கொலை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்திருக்கிறது. இந்த அட்டூழியம் பர்மா சுயாட்சிக்குஅருகதையற்றது என்பதைக் காட்டுகிறதுஎன்றுடல பிரிட்டிஷ் பத்திரிகைகள் கும்மாளம் போடுகின்றன.

# மத்தியஸ்தம்?

## டக்ரர் ஷாரீரின் இரகசியப்பிரயாணம்

இந்தோனேஷியாவில் மீண்டும் யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. ஒல்லாந்தர் தம் உடம்படிக்கைகளை மீறி, இந்தனேஷிய சுதந்திர அரசாங்க மந்திரிகளைக் காவலில் வைத்திருக்கின்றனர். இதற்கிடையில் இந்தனேஷியக் குடியரசுத் தலைவர் டக்ரர் ஐ. ஆர். சுகார்ணோவின் ஆலோசகரான டக்ரர் சுல்தான் ஷாரீர் (இவர் முன்னாப் பிரதமராகவிருந்தவர்) இரகசியமாக வெளிக்கிளம்பி இந்தியாவுக்கு வந்துவிட்டார். இந்திய அரசாங்கத்தின் கருமமாக இந்தனேஷியாவிலநின்ற மிஸ்ரர் மற்னெயிக் என்னும் ஒறிஸா சட்டசபை அங்கத்தவர் செலுத்திய ஆகாசவிமானத்தில் டக்ரர் ஷாரீர் தப்பி இந்தியாவுக்கு வந்து பண்டிதர் ஜவஹர்லாலுக்கு தம்நாட்டின் முறையீட்டைச் சமர்ப்பித்திருக்கிறார் இந்தனேஷிய-ஒல்லாந்தப் பிணக்கில் பண்டிதர் நேரு தலையிட்டு மத்தியஸதம் செய்து வைக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

# தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர்

## வடமாகாணம்முழுவதும் தயார்

கோப்பாய்த் தொகுதிக்கு நியாயவாதி ஸ்ரீ வி வன்னியசிங்கத்தையும், வவுனியா முல்லைத்தீவுப் பகுதிக்கு ஸ்ரீ த. மு. சபாரத்தினத்தையும், தனது அபேட்சகராகத் தமிழ்க் காங்கிரஸ் அதிகாரபீடம் தீர்மானித்துவிட்டது.

இப்போது வடமாகாணத்துக்குரிய 9 ஸ்தானங்களுக்கும் தமிழ்க்காங்கிரஸ்அபேட்சகர் பின்வருவோராவர்.

யாழ்ப்பாணப்பட்டினம்:
ஸ்ரீ ஜீ. ஜீ பொன்னம்பலம்
கோப்பாய் தொகுதி:
ஸ்ரீ வி வன்னியசிங்கம
காங்கேசன் துறை:
ஸ்ரீ எஸ. ஜே. வி. செல்வநாயகம்
வட்டுக்கோட்டை:
ஸ்ரீ கே. கனகரத்தினம்
தீவுப்பகுதி:
ஸ்ரீ எ. வி. குலசிங்கம்
பருத்தித்துறை:
ஸ்ரீ ரீ ராமலிங்கம்
தென்மராட்சி:
ஸ்ரீ வி. குமாரசுவாமி
மன்னார்:
ஸ்ரீ வி. சிற்றம்பலம்
முல்லைத்தீவு:
ஸ்ரீ ரீ. எம். சபாரத்தினம்

கீழ் மாகாணத்துக்குரிய 7 தொகுதிகளுக்குள் ஓர் இடத்துக்குமாத்திரம் ஸ்ரீ என். சிவபாலன் என்பவரைத் தமிழ்க் காங்கிரஸ் தன் அபேட்சகராக நியமித்துள்ளது.

# இடைக்காலத் திட்டம்

## 162,769,6 5 ரூபா செலவு

அக்டோபர் மாதம் தொடக்கம் ஜனவரி ஈறாகவுள்ள இடைக்கால வரவு செலவு திட்டத்தை இலங்கை மந்திரசபையினர் தயாரித்துவிட்டனர். அதன் பிரகாரம் இந்த நாலு மாதங்களுக்கிடையே 162, 769 615 ரூபா செலவு ஏற்படும் எனக் கணிக்கப்பட்டிருக்கிறது.

புதிய பாராளுமன்றத்து அங்கத்தவர்கள், மந்திரிமார்கள், அதில் உள்ள உத்தியோகத்தர்கள் என்பவர்களின் வேதனத்துக்கும், புதிய பாராளுமன்றத்தை அங்குரார்ப்பணம்செய்வதற்கும், குறித்த நாலு மாதத்துக்கிடையில் 11½ லட்சம் ரூபா செலவு ஏற்படும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.


# சிறந்த சங்கீதக் கச்சேரி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக் கட்டட நிதியின்பொருட்டு

இந்திய தேசியராணுவப் பெண்கள்பகுதிக் காரியதரிசியாகிய

குமாரி S. N. சரஸ்வதியும்

அவர் கோஷ்டியினரும்

1947-ம் ஆண்டு ஆகஸ்டுமீ 2ந் உ சனிக்கிழமை இரவு 7 மணி தொடக்கம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில்

நீதியரசர் கௌரவ ஸ்ரீ

C. நாகலிங்கம் அவர்கள் அநுசரணையில்

சிறந்த சங்கீதக்கச்சேரி நடத்துவர்

சங்கீத ரசிகர்கள் இவ்வருந்தருணத்தை இழந்துவிடாது சமுகஞ்செய்க

Mis 88 18—1-8-47.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

**வில்வந்தெரு மரக்காலை, கச்சேரியடி**
**புங்கம்குளம்ரேட்டு, சிவியாதெரு, யாழ்ப்பாணம்.**

எமது மரக்காலையில் எல்லாவிதமான பலகைகளும், தீராந்திகளும், றீப்பைகளும், பனைமரங்களும், சிலாகைகளும், வேப்பங்கப்புகளும், விறகுகளும், கோத்தின சிராய்களும், சகாயமான விலைக்கு கொடுக்கப்படும்.

**அகலம் கூடின வேப்பம் பலகைகளும், வண்டில் அச்சுக்குத்திகளும் ஏராளமாயிருக்கின்றன.**

"ஓடருக்கும்" சொல்லப்பட்ட தவணைக்குச் சொல்லப்பட்ட சாமான்கள் தயாராக்கிக் கொடுக்கப்படும்

**நிலைகள், யன்னல்கள், கதவுகள், அலுமாரிகள், கட்டில்கள், வாங்குகள், மேசைகள், ருக்கைகள் எல்லாம் சகாயமான விலைக்குக் கொடுக்கப்படும்.**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையிலுள்ள புங்கங்குளம் "சயிடிங்கில்" கோச்சுகள் நிற்பாட்டப்படுகிறபடியால் போக்குவரவு வசதிகள் இருக்கின்றன

மரக்காலையும் பங்கம்குளம் சயிடிங்குக்கருகிலேயே இருக்கின்றன மெயின்ரேட்டும் அருகிலே இருக்கிறபடியால்

பஸ்சாலும் போக்குவரவு செய்யலாம்

**V. P. மூலமாயும் சாமான்கள் அனுப்பலாம்**

யாழ்ப்பாணம், இப்படிக்கு,
17-7-47 A, K பொன்னையா, அல்லது இராசையா.
Mis 94 25, 29-7-47.


## காணி விற்பனவு விண்ணப்பப் பத்திரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு டபாபரிட்புத் தத்துவ வழக்கு நெ 315ல் எனக்குக் கிடைத்த உத்தரவுப்படி கீழ் ஆதன டாப்பில் விபரிக்கப்படும் வட்டுக்கோட்டை கிழக்கு, பராயமற்ற பிள்ளையாகிய முருகேசு மகள் அன்னலட்சுமியின் ஆதனம் வேண்டவிரும்புவோர் தங்கள் கேள்விப் பத்திரத்தை இந்தப் பிரசுரத் தேதியிலிருந்து இருபத்தொரு நாட்களுக்குள் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட் சக்கடத்தார் அவர்கட்கு அல்லது வழக்கறிஞர் வட்டுக்கோட்டை கிழக்கு மு. க சுப்பிரமணியம் ஆகியோருக்குச் சேர்ப்பிக்கவும். அதி உயர்ந்த கேள்விக்காரருக்கே காணி விற்கப்படும். தேவையெனக் கண்டால் மேற்படி விற்பனவை நிற்பாட்ட கோட்டுக்கு உத்தரவுண்டு.

### ஆதன டாப்பு விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு வட்டுக்கோட்டைக் கோயிற்பற்று வட்டுககோட்டை கிழக்கு இறை 'இராக்கதனை" பா நில.இல. 1 $\frac{3}{4}$ எல்லை: கிழக்கு ஒழுங்கை. வடக்கு, ஒழுங்கைடம் சிற்றம்பலம் குமாரசுவாமிக்கும், இராமநாதர் கந்தையாவுக்கும்; அம்பலவாணர் சின்னத்தம்பிக்குமுரிய வாதனங்கள். மேற்கு, சங்கரப்பிள்ளை அருணாசலத்தின் உரிமைக்காரரினுதனம். தெற்கு, ஆறுமுகம் கந்தையா கைம்பெண் தெய்வானையினுதனம். இதடங்களிற் சொரியலாய் $\frac{1}{4}$ பங்கு.

2. மேற்படி யாழ்ப்பாணப் பிரிவு கரச்சிப் பகுதி கரைச்சிக் கோயிற்பற்று பச்சிலைப்பள்ளி முரசு மூட்டையிறை, முரசு மூட்டைக் காடு எக்கர் 10, றூட் 2, பேட்சஸ் 22. எல்லை: கிழக்கு, சின்னப்பு முத்தையாவுக்கும் வாய்க்காலுக்கும் ரேட்டுக்கு விடப்பட்ட நிலமும், வடக்கு றாபி ரேட்டும், சின்னப்பு முத்துவேலுவின் ஆதனமும், மேற்கு, நா ஆறு. தெற்கு, சின்னத்தம்பி ஆறுமுகத்தின் ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் நாலில் ஒருபங்கு.

மு க. சுப்பிரமணியர்
பெட்டிசகாரரின் புறக்ரர்

(M. 93, 25-7-47)

## யாழ்ப்பாணம் அரசாங்கவிறகுகாலையில் மரவிற்பனவு

அநேக தேக்கு மரங்களும், வரிச்சுகளும், மற்றும் மரங்களும் யாழ்ப்பாண அரசாங்க விறகுகாலையில் விற்பனவுக்கிருக்கின்றன.

வாங்க விரும்புவோர் கீழே கையொப்பமிட்டிருப்பவருக்கு ஆவணி மாசம் 11-ந் திக்குமுன் விண்ணப்பிக்கவும்.

முழுவிபரங்களையும் விறகுகாலை மனேஜரிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.

ம. ஸ்ரீகாந்தா
உதவி ஏஜண்டர்
யாழ்ப்பாணம்.

21—7—47.
G 68 25 7-47

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 2712.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைகிழக்கு ஆஸ்பத்திரி ரேட்டு V.S வேலுப்பிள்ளை கைம்பெண் மீனாட்சிப்பிள்ளை தானுகவும், காலம்சென்ற வேலுப்பிள்ளையின் ஆஸ்திக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் 305-ம் இக்கத் தத்துவ வழக்கில் தத்துவகாரனுகவும் —வழக்காளி

எதிராக

வண்ணார்பண்ணை கிழக்கு 1 தம்பிப்பிள்ளை சோமசுந்தரம், 2. தம்பிப்பிள்ளை இராசரத்தினம் அல்லது மயில்வாகனம்.

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 2712-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22 (திகதி 22 8.47) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில்விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல வட்டி ரூபா 1990-ம் இதில் ரூபா 1500 க்கு 25-4-46 திகதி தொடக்கம் 3-6-46 திகதி வரைக்கும் 100-க்கு 8 வீத வட்டியும், பின்திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 177-40 சதம்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை "மாணிக்கன்காடு"நிலைப்பரப்பு நாலு (4-ம்) கல்வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை: கிழக்கு, மாணிக்கம் சுப்பையாவின் ஆதனம். வடக்கும், மேற்கும், ஒழுங்கை. தெற்கு, குருநாதர் ஆறுமுகத்திற்கும், செல்லப்பா பெண் சின்னத்தங்கத்திற்குமுரிய ஆதனம். இதடங்கலும். முற்பதிவு D 165/47.

சின்னத்தம்பி–சங்கரப்பிள்ளை
Commissioner & Licenced Auchioner.

தெல்லிப்பழை, 12 7-47
(M 90 25-7 47)

## விறகு விற்பனை

எழுதுமட்டுவால் மெயின் ரேட்டில் இருக்கும் அயனங்கைத் தோட்டத்தில் விறகு விற்பனைக்கிருக்கிறது. தேவையாளர் மேற்படி தோட்டத்திற்கு விண்ணப்பஞ் செய்யவும். ஒரு வண்டில் பாரம் விறகு விலை ரூபா 1. வாங்குவோர் தாங்களே வெட்டி ஏற்றிக்கொள்ள வேண்டும்.

M 96 25 747

# திருச்சி ரேடியோ

**சனி யூலை 26**

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7 30 வி எஸ் சக்ரபாணி வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 ஜானகி ஸ்ரீனிவாசன் பாட்டு 8-30 சித்ரகானம் இசைத்தட்டு 9 முடிவு.

1 வி எஸ் சக்ரபாணி வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2-05 சர்வகலாசாலைக் குறிப்பு 2-15 நாகர்கோயில் எம் எஸ் முத்தப்ப பாகவதர் பாட்டு 2-45 முடிவு.

மாலை 5 நாகர்கோயில் எம் எஸ் முத்தப்ப பாகவதர் பாட்டு 5 40 திருமொழி விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 ஜானகி ஸ்ரீநிவாசன் பாட்டு 7-15 கிராம நிகழ்ச்சிகள் 7-30 தமிழில் செய்திகள் 7-45 பி எஸ் வேதாசலம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 நூல் ஏணி 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்கள் 9 45 ஞானம்பாள் பாலகிருஷ்ணன் வீணை பாட்டு 10 இசை வேளை இசைத்தட்டு 10.30 முடிவு.

**ஞாயிறு யூலை 27**

காலை 7-15 கீதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7 30 கல்லிடைக்குறிச்சி எஸ லக்ஷ்மி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 குரல்வகை இசைத்தட்டு 8-30 ஆர் மீனும்பாள் ராஜன் வீணை 9 முடிவு.

12 கதம்பம் இசைத்தட்டு 12-30 தபால்மூலம் பாதநாட்டியம் 12-40 நீர்க்குமிழீயே பாடல் 12.45 மகாராஜன் நாடகம் 12-55 வீட்டில் ஒலிச்சித்திரம் 1 மணிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மின்னிசை ஒலிப்பதிவு 2 தமிழில் செய்திகள் 2-05 பெண்ணுலகம் 2-30 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 3 முடிவு.

மாலை 5 கல்லிடைக்குறிச்சி எஸ் லட்சுமி பாட்டு 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 ஆர் மீனும்பாள் ராஜன் வீணை 7- 0 தமிழில் செய்திகள் 7 45 புத்தக விமர்சனம் 8 இரைகடல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 வாத்ய கோஷ்டி இசைத்தட்டு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9-45 கே பி தேவராசு சாக்ஸபோன் 10 இசைவேளை இசைத்தட்டு 10,30 முடிவு

**திங்கள் யூலை 28**

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 மதுரை ஏ எம் மாதுகனி சாஹிப் நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புதிய பாடல்கள் ஆ இரா வித்வான்கள் தயாரிப்பு 8-30 ஏ ராமகிருஷ்ணன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 கும்பகோணம் சிவவடிவேலுபிள்ளை வயலின் 2 தமிழில் செய்திகள் 2-05 கும்பகோணம் சிவவடிவேலுபிள்ளை வயலின் 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு,

மாலை 5 மதுரை ஐ எம் மாதுகனி சாஹிப் நாகஸ்வரம் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 கும்பகோணம் சிவவடிவேலு பிள்ளை வயலின் 7-30 தமிழில் செய்திகள் 7-45 நான் கண்டசீமை 8 ஏ ராமகிருஷ்ணன் பாட்டு 8-30 நாட்டுப் பாடல்கள் டெல்லி அஞ்சல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 டி வி கிருஷ்ணமூர்த்தி பாட்டு 10 எஸ் வீ கிட்டப்பா இசைத்தட்டு 10-15 ஆ இ ரே வாத்யகோஷ்டி இசைத்தட்டு 10-30 முடிவு

**செவ்வாய் யூலை 29**

காலை 7-15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7- 0 ஏ விநாயக முதலியார் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 டி கே பட்டம்மாள் இசைத்தட்டு 8-30 ராதா ஜயராமன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ராதா ஜயராமன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 ராதா ஜயராமன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 ஏ விநாயக முதலியார் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 ராம்ராஜ்யா இசைத்தட்டு 7-15 இலக்கியவாசகம் 7-30 தமிழில் செய்திகள் 7.45 டி என் சுவாமிநாத பிள்ளை புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 தென்னிந்திய நாட்டுப் பாடல்கள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் 9-45 குரல்வகை இசைத்தட்டு 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10-30 முடிவு.


# தேவை

சகல விதமான நகை வேலைகளிலுந் தேர்ச்சி பெற்ற பத்தர்மார்கள் மாதச் சம்பளமாகவோ கம்மிஷனுகவோ வேலை செய்ய விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தங்கள் தங்கள் முக்கிய அனுபவமான வேலைகளைப்பற்றிய தகவல்களுடன் எழுதவும். 40 வயசுக்கு மேற்பட்டவர்கள் தேவையில்லை. தேவைப்பட்டவர்களுக்கு வருவதற்குரிய பேமிற் அனுப்பலாம்.

நேதாஜி டயமெண்ட் கமபெனி
162 ஈப்போ ரேட்
சென்டுல்
கோலாலம்பூர்.

தந்தி: "நேதாஜி" கோலாலம்பூர்
Mis 77 7-7-47 to 5-8-47.



## விளம்பரம்

யாழ்ப்பாணம் பெரியதெருவில், அநுமதிபெற்றுப் பல் வைத்தியம், சண் வைத்தியம் செய்துவரும் நான், பழையபடி இரு வைத்தியங்களையும் தொடங்கி நல்லமுறையில் நடத்திவருகிறேனென்பதையும், கட்பார்வைக்குரிய கண்ணுடி முதலிய பொருள்களையும், செய்கைப்பல், செயற்கைக்கண் முதலிய பொருள்களையும் இப்பொழுது போதிய அளவு தருவித்திருக்கிறேனென்பதையும் இந்த வடமாகாணத்துள்ள மக்களுக்குத் தெரிவிப்பதோடு, என்னை அபிமானிக்கும்படியும் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

| | |
|---|---|
| யோசித்தற்குரிய நேரம் நாள்தோறும் | காலை 9 மணிதொடக்கம் 12 வரை<br>மாலை 2 ,, 5 ,, |

T.t 28 11-7—10-10-47. S. சார்ல்ஸ்பத்திரானு.



## சென்னையிலிருந்து கப்பல் பிரயாணம்
## மலேயாவுக்கு உங்கள் பிரயாணம் நிச்சயமா ?

எம்மால் சென்ற சில மாசங்களாக நாகபட்டணம் மார்க்கம் ஏற்பாடாகியிருந்த பிரயாண வசதிகள் கப்பல்வரை திருப்திகரமாயிருந்தும் கப்பலில் வசதியீனங்களையுணர்ந்த எமது நண்பர்கள் சௌகரியத்துடன் குடும்ப சமேதராகப் பிரயாணஞ் செய்வதற்கு ஏற்ற வசதிகளடங்கிய கப்பல் மாசம் ஒருமுறை சென்னையிலிருந்து புறப்படுவதற்கேற்ற ஒழுங்குகளை கைகூடுவதை அறியத்தருவதுடன் எம்மிடம் எந்த நேரங்களிலும் விபரம் பெறுதற்கேற்ப ஓர்காரியாலயம் ஸ்ரான்லிரேட்டில் நிறுவப்பட்டிருக்கிறது.

முன்போல் நாகபட்டணம் மார்க்கமும் வசதிகள் செய்யப்படும்

**எஸ். ஆர். எஸ். நாதன்**
21/3, ஸ்ரான்லி ரேட் யாழ்ப்பாணம்

Std 23, 6-6-47—6-6-48


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம்பலவிதக் கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

நன்கு அறியாவிட்டாலும், நான் அவர்களையும் அவர்கள் குடும்பப் பெருமையையும் நன்கறிவேன்; நானும் மலாய்நாட்டிலேதான் உத்தியோகமாக விருந்து, அங்கிருந்து ஊருக்கு மீண்டு சிலகாலம் ஊரிலே வசித்து, மீளவும் மலாய் நாட்டிற்கே இப்பொழுதுபோகிறேன்; என் தாரத்தையிழந்துவிட்டமையினற்புநர் விவாகஞ்செய்ய உத்தேசித்திருக்கிறேன், மூந்திய தாரத்தினற் பிள்ளைகளுமில்லை; என்னிடத்திற் போதிய பணம் பண்டம் வீடுகள் நிலம்புலமெல்லாமுண்டு; ஊரிலிருக்கும்போது விவாகம் பண்ணிக்கொள்ள முயற்சி செய்தும், விதியில்லாமையினற்போலும் கைகூடவில்லை; உங்கள் ஆச்சி உடம்பட்டால் ஆச்சியின் மகளைக் கல்யாணஞ் செய்யலாமென்பது உத்தேசம்: இதுதான் உண்மை" என்று விபரமாய் அந்த மனுஷன் சொன்னான்; இராமன் சற்றுநேரம் யோசித்துவிட்டு "ஐயா, அந்த ஆச்சி நல்ல மனுஷி, நீங்கள் ஆச்சிக்கு மாத்திரம் உங்கள் நோக்கத்தை வெளியிடலாம்; ஆச்சி அதற்கு உடன்பட்டாற் செய்யலாம், இல்லையேல் விடலாம்; அதில் ஒரு குறையுமில்லையென என்னுகிறேன்" என்றான்; "ஆச்சியோடு எப்படி நான் முதற் பேசுவது. என்னை அவர்களுக்குத் விளங்காதே" என்று அந்த ஆள் சொல்ல, நாளை அந்திப்போது ஆச்சியை இந்தப்பக்கம் தனியே வந்திருக்கத்தக்கதாக நான் செய்து வைக்கிறேன்; வேணுமானல் நானும் அந்தநேரம் இங்கேதானே உலாவித் திரிவேன்; ஆச்சியோடு நீங்கள் பேச விரும்புவதை என்மூலமாக ஆச்சிக்குத் தெரிவிக்கலாம்; ஆச்சி சம்மதமானற் பேசலாம், இல்லையேல் விடலாம்; இதில் எவ்வகையான சங்கடமுமில்லை ஐயா" என்றான் இராமன் "நீ சொல்வது நல்ல உபாயந்தான்" என்றான் அந்த மனுஷன், பின்னரும் சிறிதுநேரம் அங்கிருந்துவிட்டு இருவரும் தத்தம் இடங்கட்குப் போயினர்.

### "தெய்வமும் தன்னைப் போற்றுவோர்க் கிரங்கும்"

இராமன் கண்ணகியம்மை முதலியோர் இருக்குமிடத்திற்குப் போய்ப் போசனம் முடித்துவிட்டு, சற்றுநேரம் அங்கே நிற்கும்போது கண்ணகி அவனைப் பார்த்து, "ராமன் இன்று நீ உண்ண வருதற்கு நேரஞ் சென்றுவிட்டது; என்ன பொழுதுபோக்கு" என்று கேட்க, இராமன் "வேறொன்றுமில்லை, ஆச்சி, கப்பலின் மேல் தட்டிலே நல்ல காற்று வீசுகிறது; அருமையான நிலவு எறிக்கிறது சற்றுநேரம் அங்கேநின்றேன்; அங்கே உங்களை அறிந்தவராம், ஐயா ஒருவர், அவர் நல்லமனுஷன்போலத் தோற்றுகிறார்; அவரும் தனியேயிருந்தார்; என்னோடு பேச விரும்பினார்; அதனற் கொஞ்சநேரம் நானும் அவரும் பேசிக்கொண்டிருந்தோம்; அதனலேதான் ஆச்சி நேரஞ் சென்றுவிட்டது" என்றான்ராமன்; "என்ன பேசினீர்கள்; நாங்கள் அறியலாமோ" என்று கண்ணகை கேட்க, 'நீங்கள் அறியாமல்வேறு எவர் ஆச்சியறிவது; உங்களுக்குச் சொல்லாமல், வேறு ஆருக்கு நான் சொல்வது: அந்த மனுஷன் ஒருநல்லவர்போலக் காணப்படுகிறார்; பெருங் குணமுடையவர் போலவும் தெரிகிறது; அவர்களுக்கு உங்களைப்பற்றி நல்லாய் விளங்கும்; உங்கள் குலம் மரபு ஒழுக்கம் பெருமையெல்லாவற்றையும் பாராட்டிச் சொன்னார்: நானுங் கேட்டுக்கொண்டிருந்தேன்" ஆச்சியென்றான்; இராமன் சொன்ன இந்தவார்த்தைகளைக் கண்ணகியம்மைபெரிதும்விரும்பினுள்; தங்கள்குடும்பத்தைப்பற்றிப் பாராட்டிச் சொன்னமையினலே, கண்ணகியம்மைக்கும் அந்த ஆளைப்பற்றி ஒருநல்ல எண்ணமுண்டாயிற்று. தெய்வமே தம்மைப்போற்றுபவர்க்கிரங்கி அருள் புரியுமென்றால், இந்தக் கண்ணகியம்மை தங்கள் குடும்பத்தைப் பெரிதும் பாராட்டிப் பேசிய அந்த மனுஷனை நல்லவனென்று நினைப்பதும் அவனை விரும்புவதும் நூதனமல்லவே; "இராமன, சின்னத் தங்கைச்சியும் நானும் மேல் தட்டில் இருந்தபோது, நீயும் நிற்கும்போது, சற்றுத் தூரத்திலே ஒருசார்மணையிற் சாய்ந்தபடியிருந்த அந்த ஆள்தானே நீ சொல்லுகிற ஆள்" என்று கண்ணகி கேட்க, "ஆம் ஆச்சி, அவர்தான்" என்றான் இராமன்; "அந்த ஆளை நானும் ஊரிலே எப்போதோபார்த்த ஞாபகமாயிருக்கிறது; ஆனாலும் இனரென்பது நல்லாய்ப் புலப்படவில்லை: போகட்டும், வேறு என்ன கேட்டார்" எனலும், "வேறு அதிகங் கேட்கவில்லை; நீங்கள் எந்தவூருக்குப் போகிறீர்களெனவும், போகும் நோக்கமென்ன எனவும், உங்களோடு நின்ற தங்கைச்சி உங்களுடைய மகளோ எனவும், தங்கைச்சிக்கு இன்னமும் விவாகமாகவில்லையோ எனவும், விவாகமாகாத குமர்ப்பிள்ளையைத் தூரதேசத்திற்குக் கூட்டிக்கொண்டு போதற்கு ஏதோ ஞாயமிருக்கவேணுமெனவும், நீ இவர்களுக்குத் துணையாகப் போகிறாயோவெனவும் இன்னும் ஏதோ கேட்டார்; முழுவதும் ஞாபகமில்லை ஆச்சி" என்று சொல்லிமுடித்தான் இராமன்: "இராமன், அவர் தம்மைப்பற்றி உனக்கு ஏதுஞ் சொல்லவில்லையோ" என்று கண்ணகியம்மை கேட்க, "அவரைப்பற்றி நான் விசாரித்தேன்; அவர் தம்மைப்பற்றி எனக்குச் சொன்னார்; தாம் மலாய்நாட்டிலே மூந்தி வேலையாக இருந்ததென்றும், பின் சிலமாசம் ஊரிலே வந்து இருந்ததென்றும், தமக்கு வீடு வாசல், பொருள்பண்டம், காசு பணம், நிலம் புலம், இனசனம் எல்லாருமுண்டென்றும், ஆனல் தம்முடைய மூந்தியதாரம் செத்துப்போய் விட்டதென்றும் அதற்குப் பிள்ளையில்லையென்றும், தாம ஊரிலிருந்தபோது இரண்டாமுறை கல்யாணஞ் செய்ய முயற்சி செய்ததாகவும், ஆனல் விதியில்லாமையால் கல்யாணஞ் சந்திக்கவில்லையென்றுஞ் சொன்னர் அது மாத்திரமல்லாமல, ஆச்சி, அவர் தம்மளவில் ஏதோ யோசித்தார்; அவைகளை நான் உங்களுக்குச்சொல்ல விரும்பவில்லை ஆச்சி" என்று இராமன் சொல்லுதலும், "என்ன யோசித்தார், என்ன சொன்னார், அவைகளைப்பற்றிச் சொல்லவொண்ணுதா" என்று கண்ணகை கேட்க, "அவர் சொன்னதும் கேட்டதும்முந்திச்சொல்லிவிட்டேன் ஆச்சி, யோசித்ததென்ன இப்படியேயிருந்து செத்துப்போனல் இந்தப் பொருள் பண்டம் காணிபூமியெல்லாம் அநியாயமாக அந்நியருக்குப் போய்ச் சேருமேயென்பதைப்பற்றித்தான் அவர் யோசித்திருக்க வேண்டுமென்று நான் எண்ணுகிறேன்" என்றான் இராமன்: "அவருடைய பெயரென்ன? நீ கேட்கவில்லையா" என்று கண்ணகியம்மை வினவ, "ஆச்சி, ஒரு பெரிய மனுஷனை உம்முடைய பெயரென்ன என்று நான் கேட்பது முறையல்லவென நினைத்து நான் கேட்கவில்லை; நீங்கள் கேட்டு வரச்சொன்னால், நாளைக்குக் கேட்டு வந்து சொல்லுகிறேன்" என்று இராமன் கூற, "நான் கேட்பதும் முறையல்ல, அவர் தாமாகச் சொன்னற் கேட்டுக்கொள்" என்றாள் கண்ணகியம்மை.

### "அது எனக்குத் தெரியாது"

ஆச்சி, அவர் என்னோடு தம் வரலாற்றையெல்லாம் சொல்லியநோக்கொட்டு எனக்கு ஒருயோசனை பிறந்திருக்கிறது: அதனை உங்களுக்குச் சொன்[illegible] களா" [illegible] ராமன் நான் அப்படிக் குறையெண்ண மாட்டேன், உன்னையும் என் பிள்ளைபோலேதானே எண்ணி நடக்கிறேன், நீ பயப்படாமற் சொல்லு" என்றாள் கண்ணகி; வேறொன்றுமல்ல ஆச்சி, நீங்கள் போய்ச் சிங்கப்பூரில் உங்கள் மகனிடஞ் சேர்ந்தபிறகு, நான் அந்த ஆளிடம் போய் அவருக்கு வேலைக்காரனக இருக்கலாமென்று யோசிக்கிறேன். உங்களுக்குச் சம்மதமா" என்று கேட்டான் ராமன்; 'ஏன் அப்படி யோசிக்கிறாய்" என்று கண்ணகியம்மை கேட்க, வேறொன்றுக்குமல்ல, ஆச்சி, 'அவருடன் போய் வேலைக்காரனக இருந்தால், அவரில்லாத காலத்திலே, அந்தப் பணம் பண்டம் வீடுவாசல் காணிபூமி யெல்லாம் எனக்குச் சேருந்தானே" என்று ராமன் சந்தோஷத்தோடு சொல்ல, ராமன் உனக்குப் பைத்தியமா? உனக்கு எப்படிச் சேரும், அவருக்கு மனைவிமக்களிருந்தால் அவருக்கல்லவா சேரும்" என்று கண்ணகி சிரிப்புடன் சொல்ல, "அப்படியா! அது எனக்குத் தெரியாது" என்றான் ராமன்.

### "உங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன்"

அந்த மனுஷன் அன்று படுக்கைக்குப் போனனேனும் அவனுக்கு உறக்கம் வரவில்லை; கண்ணகியம்மையருகில் அன்று தான் கண்ட பாக்கியத்தை எண்ணியெண்ணி அவன் மனம் கையலானன்; பாக்கியம் போன்ற பேரழகு வாய்ந்த உத்தம கன்னிகை தனக்கு இல்லாளாக வாய்த்தால், சகல பாக்கியமுந் தன்னிடம் வந்து சேருமென்று அவன் நினைத்தான்; நான் பிரயாணம்பண்ணும் இந்தக் கப்பலிலேயே இந்நங்கையும் பிரயாணம்பண்ண நிகழ்ந்தமை ஒருபோது என்னுடைய நல்லூழாகவிருக்குமோ என்று சிந்தித்தான்; இந்த நீண்ட இரவு எப்போது விடியுமோ] விடிந்தாலுமென்ன? நாளை மாலைக்காலமாகவேண்டுமே. மாலைக் காலமானலுமென்ன, அந்த ஆச்சி தனியே அந்த நேரத்தில் மேல்தட்டில்வந்திருந்தாற்றனே நான் ஏதும் பேச முடியும்; அப்படித்தான் பேசிவிட்டாலும் அதனலாவதென்ன; அந்த ஆச்சியும் உடன்படவேண்டுமே" என்று இப்படி யோசித்துக்கொண்டு கிடந்த மனுஷன் நான்காம் யாமத்தில் உறங்கிவிட்டான்; உறங்கினனேனும் அதிகாலையில் எழுந்து தன் காலைக்கடன் முடித்துக்கொண்டு போசனமுஞ் செய்துவிட்டுக் கப்பலின் மேல்தட்டிலே போயிருந்தான்; அப்படியிருந்தது கண்ணகி வருவாளென்றெண்ணியல்ல; இராமன் அந்தப்பக்கமாக வந்தால் ஏதும் அறியலாமென்றெண்ணியே; சற்றுநேரம் சிந்தனையோடு கூடியவனய் அந்த மனுஷன் இருக்கும்போது, அவனுடைய அதிர்ஷ்டவசத்தினற் போலும் இராமனும் அங்கே வந்தான்; இராமனைக் கண்டமாத்திரத்தே அந்த மனுஷன் பாக்கியத்தைக் கண்டால் எத்துணை மகிழ்ச்சியடைவானே, அதனைக் காட்டிலும் பாதி மகிழ்ச்சியடைந்தானய், "இராமன் இப்படி வரவேண்டும்" என்று இதமாக அவனைக் கூப்பிட்டு அருகில் இருக்கச்செய்தான்; "என்ன விசேஷம்?' என்று அந்தமனுஷன்கேட்க, இராமன் "ஒரு விசேஷமுமில்லை; உங்களைப்பற்றி எங்கள் ஆச்சிக்குச் சொல்லியிருக்கிறேன்' என்றான்; "சந்தோஷம்; அந்த ஆச்சி இன்று மாலை தனியே இங்கு வரக்கூடுமோ?" என்று அந்த ஆள் கேட்க, இராமன் "வரச் செய்கிறேன்" என்றான்; 'இராமன்! நான் உனக்குஎன்ன உதவி செய்யவேண்டுமோ, கூசாமற் சொல்லு. செய்யக் காத்திருக்கிறேன்" என்று அன்புடன் கேட்க, 'இப்போதைக்கு ஒன்றும் வேண்டாம் ஐயா, கேட்டதற்காக வணக்கம் என்று [illegible] கூறித் தான் பின் [illegible]க் சொல்லிவிட்டு அவன்

## ஸ்ரீ சுந்தரர் குருபூஜை

யாழ்ப்பாணம் ஹிந்து மகாசபையின் ஆதரவில் மேற்படி குருபூஜை வண்கிழக்கு லங்காக்கல்லூரி மண்டபத்தில் இன்று (25 7-47) இரவு 7 மணி தொடக்கமாக நிகழும்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஆதரவிலும் மேற்படி குருபூசை இன்று நீராவியடி திலகவதியார் மடத்தில் நிகழும்.

## வண்மேற்கு விதானை நியமனம்

வண்ணார்பண்ணை மேற்கு விதானையாராக, அவ்வூர் திரு. கா. நவரத்தினமவர்களே பழையபடி நியமனம் பெற்றுள்ளாரென அறிபலானேம்.

## கிளிநொச்சியில் மலேரியாச் சுரத்தின் நிலைமை

D D T என்னும் அதிசயமான கிருமிசங்காரி எண்ணெய் தெளிக்கப்பட்டதால் கரைச்சிப் பகுதியில் நுளம்புகள் ஒழிந்தன. நுளம்புகளொழிந்ததால், காட்டுக் காய்ச்சல் என்னும் மலேரியாச்சுரம் மறைந்துவிட்டது.

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் சென்ற, இவ்வாண்டுகளில்மலேரியாச் சுரத்துக்காகச் சிகிச்சை பெற்றோர் எண்ணிக்கைகள் பின் வருமாறு:

| | 1946 | 1947 |
|---|---|---|
| தை மாதம் | 600 பேர் | 299 பேர் |
| மாசி ,, | 525 ,, | 255 ,, |
| பங்குனி ,, | 544 ,, | 191 ,, |
| சித்திரை ,, | 481 ,, | 190 ,, |
| வைகாசி ,, | 293 ,, | 159 ,, |

1945ம் ஆண்டு சித்திரை மாதம் தொடக்கமாகவே குறிக்கப்பட்ட D D T மருந்து தெளிக்கப்பட்டது இவ்வாண்டுகரைச்சிப்பகுதி முழுவதற்கும் D D T மருந்து தெளிக்கப்படுவதால் காலசெதியில் கரைச்சிப் பகுதியில் மலேரியாக் காய்ச்சலாற் பீடிக்கப்படும் ஒரு நோயாளியைத் தானுங் காணமுடியாதென்பது மறைக்க முடியாத உண்மை. ஆகவே யாழ்ப்பாண மக்கள் கிளிநொச்சியிற் குடியேறி கிருஷிகத்தை வளர்த்து. தங்களுக்கும் ஏனைய மக்களுக்கும் உதவிசெய்ய இன்னுந் தயங்குவதேனே? உணவுப் பஞ்சத்தைப் போக்க கமச் செய்கை லீடுபட்டுழைக்க, எங்கள் மக்களைக் காக்க முன் வருவீர்களாக.

மலேரியா மறைந்தது! காட்டுச் சுரம் என்னுங் கொடிய நோய் தொலைந்தொழிந்தது என ஆனையிறவுத் திருத்தொண்டுப் பொதுச்சபைக் காரியதரிசிதெரிவிக்கிறார்

கண்ணகியும்மையும் மக்களுமிருக்குமிடத்திற்குப் போசனஞ் செய்யும்படி போயினன்; அந்த மனுஷனும் தானிருக்குமிடத்திற் போயிருந்தான்;

### "தாங்கமுடியாத தலையிடி"

ராமனும் கண்ணகியம்மையும் அந்த இரவு பேசிய விஷயங்கள் அயலே படுத்துக்கிடந்த சிவபாக்கியம், பாக்கியலட்சுமி யென்னு மிருவர் காதுகளிலும் பட்டன; அவர்கள் கேட்டுங் கேளார்கள்போற் கிடந்தனர்; இராமன் அங்கே மீண்டு போனபோது, பாக்கியலட்சுமி தனக்குத் தாங்கமுடியாமல் தலையிடிக்கிறதென்று படுத்தபடி கண்ணகியம்மைக்குச் சொல்வதைக் கண்டான்: "சின்னத் தங்கைச்சி, உங்களுக்கென்ன தலையிடியா, கண்குத்தா" என்று பரிவுடன் இராமன் கேட்க, "இரண்டுந்தான் ராமன்" என்றாள் பாக்கியலட்சுமி; "அம்மா, சற்றுப் பொறுங்கள் ஒரு நொடிப்போதில், நான் நல்ல மருந்து கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அந்த ஆளிடம் வந்து 'ஐயா, தாங்கமுடியாத தலையிடி, சகிக்கமுடியாத கண்குத்து, இவைகளுக்கு இப்போதைக்கு ஆகிய மருந்து உங்களிடமுண்டோ' என்று கேட்க "ஓம், என்னிடத்தில் நல்ல 'ஒறியன்றல்பாம்' இருக்கிறது, தருகிறேன்" என்று சொல்லி விரைவாகத் தன் பயணப்பெட்டியைத் திறந்து எடுத்துக்கொடுக்கும்போது, "ஆருக்குச் சுகமில்லை" என்று அந்த மனுஷன் கேட்க "அந்தத் தங்கைச்சிக்குத்தான்" என்று சொல்லி அதனை வாங்கிக்கொண்டு விரைவாய்ப் போனன் இராமன். (வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்மயோகிசுந்தரர்

1-ம் பக்சத் தொடர்ச்சி

டம் சுந்தரருக்கு இருந்த அன்பை அளவிட்டு முடியாது. பதினொருபாசுரங்களையுடைய திருத்தொண்டத்தொகை பதிகம் இவ்விஷயத்தைவற்புறுத்தும் அடியார்களைப் பாடுமாறு இறைவனுற் கட்டளையிடப்பெற்ற சுந்தரர், "பாடும் வல்லமையை எனக்கு அருளல்வேண்டும்" என்று இறைவனைப்பிரார்த்திக்க அவன், 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்", என்று அடி எடுத்துக்கொடுத்தனன். அவன் சுந்தரரைத் தடுத்தாட்கொண்டபோதும், "பித்தா" என்று தொடங்கிப் பாடும்படி அவனே அடியெடுத்துக் கொடுத்த விஷயம் கவனிக்கற்பாலது.

இந்தப் பதிகமே, நம்பியாண்டார் நம்பி அருளிய "திருத்தொண்டர் திருவந்தாதி"க்கும் சேக்கிழார் அருளிய 'பெரியபுராண"த்துக்கும்மூலம் சுந்தரர் இதை அருளியிராவிட்டால், அவ்வடியார்கள்பெயர்களைக்கூடநாம தெரிந்துகொண் டிருக்கமாட்டோம். இதைஞாபகத்தில்வைத்துக்கொண்டு தான்சேக்கிழார் தமது பெரியபுராணத்தில் சுந்தரருக்கு நன்றிசெலுத்துகிறார். சேக்கிழாருக்குச் சுந்தரரே பிரதான கதாநாயகன். அவருடைய சரித்திரத்தைக்கூறும்போதுதான் இடையிடையே மற்ற அடியார்களின் சரித்திரங்களைச் சொல்லுகிறார், சுந்தரர் அருளிய பதிகங்களில் இரண்டொன்று தவிர மற்றவற்றைப் பெரியபுராணத்தில் பிரஸ்தாபித்திருப்பதும் இதை வலியுறுத்தும்.

ஆண்டவனுடைய தோழனுக விருந்தபோதிலும், சுந்தரர் காட்டிய பணிவும் அடக்கமும் ஒப்புயர்வற்றன. பதிகங்கள் பாடிச் செல்லுங்கால் அவர் திருநாவுக்கரசருடைய அவதாரஸ்தலமான திருவதிகைக்கு வந்தார். "உடைய அரசுலகேத்தும் உழவாரப் படையாளி, விடையவர்க்குக் கைத்தொண்டு விரும்புபெரும் பதியைமிதித்தடையுமதற்கஞ்சுவன்" என்று அதனுள் புகாமல் புறத்திருந்த மடம் ஒன்றில் தங்கினர். இதைப்போலவே, அவர் சீர்காழியை அடைந்தபோது, அவ்வூர் திருஞானசம்பந்தருடைய அவதாரஸ்தலமாகையால் அதை மிதிக்காமல் எல்லைப்புறமாக வலம் வந்தார். பின்னும், திருவாலங்காட்டை யடைந்தபோது, அவ்வூர் காரைக்காலம்மையார்திருத்தலையாலே வலங்கொண்டதாதலால், அதையும் மிதிக்கவஞ்சி, அயலே தங்கினர். திருஞானசம்பந்தரும் இந்தத் திருவாலங்காட்டை மிதிக்கவஞ்சி அதன் அருகில் இருந்த செழும்பதியில் தங்கியிருந்ததை இங்கு குறிப்பிடலாம்.

மெய்யடியார்கள் அனைவரும் தங்களுடைய சிறுமையையும், ஆண்டவனுடைய பெருமையையும் பலபடியாகக் கூறியிருக்கின்றனர். திருவாரூரை அணுகியபோது, சுந்தரர் அங்கிருந்த திருத்தொண்டர்களை நோக்கி "நான் கல்லினும் வலியமனத்தேன்; குற்றங்கள் பலவுடையேன்; சார்ந்தவர் தம்மடில்சாரேன்; வன்சொல்லையுடையேன்; ஆசைகளை அறுக்ககில்லேன்; இப்படிப்பட்ட சழக்கனை ஆரூர்ப்பெருமான் ஆள்கொள்வரோ? என்று கேளுங்கள்," என்கிறார். இறைவனுல் தடுத்தாட்கொள்ளப் பெற்றும், திருவடிதீக்ஷை பெற்றும் தூயரான சுந்தரர் இப்பதிகத்தில் தமது பணிவையே தெரிவிக்கின்றார்.

# முடியாது!

## குடியேற்றநாட்டு மந்திரியின் பிடிவாதம்

இலங்கைச் சமசமாஜக் கட்சித் தலைவராகிய டக்ரர் எஸ். ஏ. விக்கிரமசிங்ஹ, ஓர் அரசியற்குற்றம் காரணமாகச் சிறைத் தண்டனை பெற்றமையினுல், அவர் புதிய பாராளுமன்றத்தில் அபேட்சகராக முன்வருவது தடுக்கப்பட் டிருக்கிறது. இந்தத் தடையினை நீக்கவேண்டு மென்று இலங்கையரசாங்கசபை தீர்மானித்தது. ஆனல் இதுவரை இதுசம்பந்தமாக ஓர் நடைவடிக்கையும் குடியேற்ற நாட்டு மந்திரியினுல், அத்தடையை நீக்க எடுக்கப்படவில்லை. அப்படி நடைவடிக்கை எடுக்காததற்குக் காரணம் என்ன என்று பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலே மிஸ்ரர் டி. என். பிறிற் என்பவர் குடியேற்ற நாட்டு மந்திரியைக் கேட்டார்.

டக்ரர் விக்கிரமசிங்ஹவின் மீதுள்ள தடையுத்தரவை நீக்கிவிட வேண்டுமென்றோ, அவர்செய்த அரசியற் குற்றத்தை மன்னித்துவிடவேண்டு மென்றோ இலங்கைத் தேசாதிபதி நாளிதுவரை சிபாரிசு செய்யவில்லை. எனவே, தான் இவ்விஷயத்தில், சட்டத்தை மீறி எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று குடியேற்றநாட்டு மந்திரி மிஸ்ரர் கிறீச் ஜோன்ஸ் பதில் இறுத்தார்.

## சேர் ஷாபத் மரணம்

மூஸ்லிம்லீக்கினர்இந்திய இடைக்கால அரசாங்கத்திற் சேருமுன்னர் அதில் ஓர் மந்திரியாகவிருந்து காங்கிரசுடன் ஒத்துழைத்த சேர். ஷாபத் அஹ்மத்கான் சென்ற வெள்ளிக்கிழமை சிம்லாவில் தேகவியோகமானர். இவர் இடைக்கால அரசாங்கத்திலே அங்கத்துவம்வகித்தகாலத்தில் சிலகாடையரால் கத்தியால் குத்தப்பட்டது எல்லார்க்கும் ஞாபகமிருக்கலாம். அவர் அதிற் சுகமடைந்தனரேனும், அவரது தேகநிலை கீழ்நோக்கி வந்தது. சேர். ஷாபத் தென்னுபிரிக்காவில் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாகவும் கடமையாற்றியவராவர்.

# பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

நீ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to , 1—4—48

# தந்தரோக சஞ்சீவி

## கந்தசாமி வைத்தியர் சந்தனுதித் தயிலம்

### ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வெந்நீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும், முரசுவளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் சம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

தேருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியம்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்

வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30.6.48 (வெ)


# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம் - பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸற் கம்பனி.

லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிலேஸ வங்கி.

கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)

யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242,ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்,
வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

நடைமுறைக்கணக்கு:-
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்

சேமிப்புப் பணம்:-
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு:-
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று:-
இதற்கான ஏஜென்டுகள் உலகெங்கும் உண்டு.

பிறநாட்டு விவகாரப் பகுதி:-
ஜீ. ஓ. எச். கட்டிடம் யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

(Std.12 2-8—31 7-47) (F)



உ
குகமயம்
முல்லைத்தீவு, குமாரபுரம்

## ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிகோவில்

# திருப்பணி விஞ்ஞாபனம்

இச் சுப்பிரமணியதலத்தின் தொன்மை, மகிமை என்னும் இவைகளைப் பற்றிச் சைவ மக்கள் பலர் அறிவர், சைவாபிமானிகள் காலந்தோறும் உதவிவரும் தருமப்பொருளைக் கொண்டே இத் திருக்கோவிலின் திருப்பணி நிறைவேறி வருகின்றது.

இப்பொழுதும் இத்திருக்கோவிலிலுள்ள விநாயகர் ஆலயத்தின் எஞ்சிய திருப்பணி திருமஞ்சனக் கிணறு ஸ்தம்பமண்டபம், மகாமண்டபத்தின் கிழக்கு தெற்கு வாசல்களுக்குக் கதவுகள் அமைத்தல், இரண்டுமண்டபங்களுக்கும் நிலத்திற்கு சீமெந் கொங்கிறிற் இடுதல், வாகனசாலை களஞ்சியம் சுற்றுமதில் என்னும் இவைகளைச் செய்து நிறைவேற்றவேண்டி யிருப்பதால் தங்கள் தங்களாலியன்ற பொருள் உதவி, மேற்படி திருப்பணிகளை நிறைவேற்றிவைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"போர்பொழு தருந்துணை புரிந்த புண்ணியம்"

இங்ஙனம்,

குமாரபுரத் திருப்பணித் தொண்டன்,
கு. பரமசாமிக்குருக்கள்

Std 26—1-7-47 30-6-47


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna. on Friday, July. 25, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org